# தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை

## வடகிழக்கு பருவமழை காலத்தில் தோட்டக்கலைப் பயிர்களுக்கான ஆயத்த நிலை ஏற்பாடுகள்

**பசுமைக்குடில்**

- பசுமைக்குடிலின் அடிப்பாகத்தை பலமாக நிலத்துடன் இணைப்புக் கம்பிகளால் இணைக்கவும்.
- பசுமைக்குடிலின் கதவுகள் மற்றும் ஜன்னல்கள் பத்திரமாக மூடி உள்பகுதியில் காற்று உட்புகாமல் பாதுகாக்கவும்.
- அருகில் மரங்கள் இருப்பின் அதன் கிளைகளை கவாத்து செய்யவும்.
- பசுமைக்குடிலின் கட்டுமானத்தினுள் கிளிப்புகள் ஏதேனும் இருப்பின் அவற்றை மாற்றவும்.

**நிழல்வலைக்குடில்**

- கிழிந்து போன நிழல் வலைகளை தைத்து சரிசெய்யவும்
- நிழல்வலைக்குடிலின் அடிப்பாகம் பலமாக நிலத்துடன் இணைப்புக் கம்பிகளால் இணைக்கப்பட்டுள்ளதை உறுதி செய்யவும்.

### I. பல்லாண்டு பயிர்கள்

**1. மா/பலா/முந்திரி/கொய்யா/எலுமிச்சை**

- காய்ந்த மற்றும் பட்டுப்போன கிளைகளை அகற்றிட வேண்டும்.
- மரங்களின் எடையை குறைக்கும் வகையில் கிளைகளை கவாத்து செய்ய வேண்டும்.
- மரத்தின் அடிப்பகுதியில் மண் அணைத்து தண்டுப் பகுதியில் மண்ணை குவித்து வைத்தல் வேண்டும்.
- தோட்டத்தில் தேவையான வடிகால் வசதி செய்திட வேண்டும்.
- நோய்த்தடுப்பு மருந்துகள் தூர்ப்பகுதியில் நனையும்படி தெளிக்க வேண்டும்.

- இளம் செடிகள் காற்றினால் பாதிக்கா வண்ணம் தாங்கு குச்சிகள் கொண்டு கட்ட வேண்டும்.
- கனமழை காற்று முடிந்தவுடன் மரங்களில் பாதிப்பு இருப்பின் . உடனடியாக வேர்பகுதி யை சுற்றி மண் நனைக்க வேண்டும்
- பாதிக்கப்பட்ட கிளைகளை அகற்ற வேண்டும் மரங்களுக்கு தேவையான தொழு உரம் இட வேண்டும்
- .நோய் தடுப்பு முறைகளை பின்பற்ற வேண்டும்

2. **திராட்சை**

- கொடியின் அடிப்பகுதியில் மண் அணைத்து விட வேண்டும்.
- உரிய வடிகால் வசதி செய்திட வேண்டும்.
- திராட்சைக்கொடியில் போர்டோகலவை பசையினைப் பூச வேண்டும்.
- அதிகப்படியான இலைத்தளைகளை கவாத்து செய்தல் வேண்டும்.
- திராட்சைக் கொடிகளை பந்தல் அமைப்பில் நன்கு கட்ட வேண்டும்.

3. **மிளகு**

- உரிய வடிகால் வசதி செய்திட வேண்டும்.
- டிரைக்கோடெர்மா விரிடி மற்றும் சூடோமோனாஸ் பூஞ்சாண உயிரியல் கொல்லி மருந்துகளை வேர்ப்பகுதியில் இட்டு நோய் வராமல் தடுக்க வேண்டும்.
- தாங்குச் செடிகளில் நிழலினை ஒழுங்குப்படுத்த கிளைகளை கவாத்து செய்ய வேண்டும்.

4. **கிராம்பு மற்றும் ஜாதிக்காய்**

- உரிய வடிகால் வசதி செய்திட வேண்டும்.
- காய்ந்தபோன இலைகள் மற்றும் பட்டுப்போன கிளைகளை அகற்றி நிழலினை ஒழுங்குப்படுத்த வேண்டும்.
- மரத்தின் அடிப்பகுதியில் மண் அணைத்து தண்டுப் பகுதியில் மண்ணை குவித்து வைத்தல் வேண்டும்.
- கிளைகளை கவாத்து செய்ய வேண்டும்.

- சிறிய செடிகள் காற்றினால் பாதிக்கா வண்ணம் தாங்கு குச்சிகளோடு கயிற்றால் கட்ட வேண்டும்.

5. **கொக்கோ**

- காய்ந்தபோன இலைகள் மற்றும் பட்டுப்போன கிளைகளை அகற்றிட வேண்டும்.
- அதிகப்படியான இலைத்தளைகளை கவாத்து செய்தல் வேண்டும்.
- மரத்தின் தண்டுப்பகுதியில் போர்டோக்கலவைத் தெளிக்க வேண்டும்.
- முதிர்ந்த பழங்களை அறுவடை செய்ய வேண்டும்.
- சிறிய செடிகள் காற்றினால் பாதிக்கா வண்ணம் தாங்கு குச்சிகளோடு கயிற்றால் கட்ட வேண்டும்.

6. **ரப்பர்**

- சிறிய செடிகள் காற்றினால் பாதிக்கா வண்ணம் தாங்கு குச்சிகளோடு கயிற்றால் கட்ட வேண்டும்.
- செடியின் அடிப்பாகத்தை சுத்தம் செய்து உள்நோக்கி சாய்வு அமைத்து வடிகால் வசதி செய்ய வேண்டும்.
- ரப்பர் பால் வடிக்கும் பகுதியில் பாதுகாப்பு பூச்சு பூச வேண்டும்.
- மழைப்பாதுகாப்பு கவசம் பயன்படுத்த வேண்டும்.

## II. வருடாந்திரப்பயிர்கள்

### 1. வாழை

- காற்றினால் பாதிப்பு ஏற்படும் பகுதிகளில் மரத்தின் அடியில் மண் அணைத்தல் வேண்டும்.
- சவுக்கு அல்லது யூகலிப்டஸ் கம்புகளை ஊன்றுகோலாக பயன்படுத் தி முட்டுக்கொடுத்து வேண்டும்.
- மரங்களை சுற்றிலும் சுத்தபடுத்தி நல்ல வடிகால் வசதி அமைக்க வேண்டும்.
- வாழைத்தார்களை முறையாக மூடிவைத்தல் வேண்டும்.

- 75 சதவீதத்திற்குமேல் முதிர்ந்த தார்களை அறுவடை செய்தல் வேண்டும்.

## இதர தோட்டக்கலைப் பயிர்களுக்கான வழிமுறைகள்

- தோட்டக்கலைப் பயிர்களான வாழை, மரவள்ளி, வெங்காயம், மிளகாய், தக்காளி, வெண்டை, கொத்தமல்லி, கத்தரி, முட்டைகோஸ், பூண்டு, இஞ்சி, உருளைகிழங்கு, மஞ்சள் மற்றும் கேரட் போன்ற பயிர்களுக்கு உ ரிய காலத்தில் பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் பயிர் காப்பீடு செய்ய வேண்டும்.
- அனைத்து வயல்களிலும் அதிக நீர் தேங்கா வண்ணம் உரிய வடிகால் வசதி செய்திட வேண்டும்.
- நீர்பாசனம் மற்றும் உரமிடுதல் ஆகியவற்றை தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டும்.
- காற்றினால் ஏற்படும் சேதத்தை தவிர்க்க காற்று வீசும் திசைக்கு எதிர்திசையில் குச்சிகளால் முட்டுகொடுத்து புதியதாக நடவு செய்த செடிகள் சாயாவண்ணம் பாதுகாக்கவும்.
- வயல்களில் தேவையான பயிர்ப்பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.